Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

# சங்ககாலஇசை வளர்ச்சியில் நரம்புக்கருவிகளின் பங்களிப்பு

திருமதி சுஜாதா நிரஞ்சன்
சிரேஷ்டவிரிவுரையாளர், வாத்திய இசைத்துறை, சேர். பொன். இராமநாதன் அரங்காற்று மற்றும் கட்புலக் கலைகள்பீடம்,
யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம், இலங்கை. 40000.
sujathaviolin@gmail.com

11

**ஆய்வுச்சுருக்கம்**

பண்டைத் தமிழிசையையும் வாழ்வியலையும் எடுத்துக்காட்டும் காலத்தின் கண்ணாடிகளாக விளங்குபவை அந்தந்தக் காலத்தில் எழுந்த இலக்கியங்களாகும். இவை மன்னர் மக்கள் அவர்களின் வாழ்வியல் முறைகள் பற்றியும் இசை மற்றும் இசைக்கருவிகள் பற்றிய செய்திகளையும் எடுத்துத் தருகின்றன. இவற்றில் கூறப்பட்ட செய்திகள் வாயிலாகப் பண்டைத் தமிழ் மக்கள் இசையிலும், இசைக்கருவிகள் வாசிப்பதிலும் தேர்ச்சியுடையவர்களாக விளங்கியமை புலப்படுகின்றது. சங்ககாலத்தில் பயன்படுத்தப்பட்ட இசைக்கருவிகளில் நரம்புக்கருவியானது ஏனைய இசைக்கருவிகளை விட முக்கிய இடத்தை வகிப்பதுடன் இசை வளர்வதற்கு மிகவும் உறுதுணையாகவும், பக்கபலமாகவும் விளங்கியுள்ளமையை இக்காலப்பகுதியில் எழுந்த நூல்கள் வாயிலாக அறியமுடிகிறது. சங்ககாலத்தில் எழுந்த இலக்கிய நூல்களான எட்டுத்தொகை மற்றும் பத்துப்பாட்டு போன்ற நூல்கள் இவை பற்றிய செய்திகளை எமக்குத் தருகின்றன. அக்காலப்பகுதியில் தோற்கருவி, துளைக்கருவி, கஞ்சற்கருவி, நரம்புக்கருவி ஆகிய நால்வகைக் கருவிகளும் பயன்படுத்தப்பட்டன. இந்த நரம்புக்கருவிகளில் யாழ் என்ற நரம்புக்கருவி பெரிதும் பயன்படுத்தப்பட்டுள்ளது.

திறவுச்சொற்கள்: இசை, சங்ககாலம், இசைக்கருவிகள், நரம்புக்கருவி, சங்க இலக்கியங்கள்

## முன்னுரை

தமிழிலக்கிய வரலாற்றைப் பழங்காலம், இடைக்காலம், இக்காலம் என்று வகுக்கலாம். இவற்றுள் பழங்காலத்தினுள் சங்க இலக்கியங்கள், நீதி இலக்கியங்கள், பழம்பெரும் காப்பியங்கள் ஆகியவை அடங்கும். இக்காலம் கி.மு 400 முதல் கி.பி 200 ஆண்டு வரையான காலகட்டமாகும். இக்காலம் கடைச்சங்க காலம் எனவும் அழைக்கப்படுகிறது. இக்காலம் தமிழிலக்கிய வரலாற்றில் பொற்காலம் என்று கருதப்படுகிறது. இங்கு அகம், புறம், சார்ந்த நூல்கள் தோற்றம் பெற்றன. இவற்றுள் எட்டுத்தொகை, பத்துப்பாட்டு நூல்கள் இக்காலப் பகுதியைச் சேர்ந்தவை. இவற்றில் பாணர்கள் இசைக்கருவிகளை மீட்டி இசை வளர்த்த செய்திகள் காணப்படுகின்றன.

பண்டைத் தமிழர் பல்வேறு கருவிகளைப் பலவகையாகப் பயன்படுத்திப் பண்ணிசையையும்,

தாளவிசையையும் இனியமுறையில் எழுப்பிச் சுவைத்துள்ளனர். ஒலியுணர்வு மிக்கவர்களால் மட்டுமே சாதனையாக்கி இத்தகைய இசையமைப்பைக் காட்ட முடியும் என்று கருதும் அளவிற்குச் சங்ககால இசைக்கலை வளர்ச்சி பெற்றிருந்ததாகத் தோன்றுகின்றது." (பெருமாள், ஏ.என், 1984, பக்.43). சங்ககாலத்தில் பல வகையான யாழ்களும் முரசுகளும் இசைக்கப்பட்டுள்ளன.

"ஆஸ்திரேலியாவில் ஒரு பறவையின் குரலை நரம்பிசைக்கருவியின் ஒலியுடன் தொடர்புபடுத்திக் கண்டதினால் அதற்கு லயர்பர்ட் (Lyre bird) என்று பெயர் கொடுத்துள்ளனர்." (பெருமாள், ஏ.என், 1984, பக்.45). "அருவி அலை மீது மோதி ஒலி மாறி விழுவதைக் கேட்டதும் அதைப் "பறையிசை அருவி" (புறம்:229:14) என்று கூறியது ஈரொலிகளை ஒப்பிட்டு உணரும் ஆற்றலைக் காட்டுகிறது. (பெருமாள், ஏ.என், 1984, பக்.45).

"இயற்கையிலிருந்து எழும் ஒலிகளைக் கேட்டு அவற்றின் இனிமையைச் சுவைத்துப் பல்வேறு இசைக்கருவிகளைக் கண்டு பிடிக்கும் திறமையுடன் மனிதன் விளங்கியிருக்கிறான் என்று கருதுவதற்குத் தகுந்த அளவில் சில குறிப்புகளைச் சங்கப்பாடல்களில் காணமுடிகிறது. (பெருமாள், ஏ.என், 1984, பக்.46). "மூங்கிலில் வண்டுகள் துளையிட்டு அதன் வழியாகக் காற்றுப் புகுந்து ஒலி எழுப்புகிறது. அருவி மலையிலிருந்து விழும் போது பாறைகளில் மோதிப் பலவிதமான ஓசைகளைக் கேட்கச் செய்கிறது. வண்டுகள் மலைச்சாரலில் முரன்று அணைவி ஒருவித ஒலியைக் கூட்டுகிறது. இவ்வொலிகளைக் கேட்ட மனிதன் உணர்வில் எழுச்சி ஏற்படுகிறது. இவ்வகை உணர்வைப் பாடலில் ஏற்றி ஒரு புலவர் காட்டுகிறார்.

"ஆடமைக் குயின்ற அவிர் துளை மருங்கின்……" (பெருமாள், ஏ.என், 1984, பக்.46).

"கழையின் துளை வழியாகக் காற்றுச் சென்று ஒலி செய்வது ஊதும் குழலை நினைவு படுத்தும். அருவி ஒலிப்பது முழவினை நினைக்கத் தூண்டும், வண்டின் இமிரொலி யாழினை எண்ணச் செய்யும். இயற்கையான ஒலிகளைக் காட்டிச் செயற்கையான இசைக்கருவிகளின் இன்னொலிகளைப் பொருத்திக் காட்டியுள்ளமை கவிஞரின் கலையுணர்வையும் சிந்தனைப் போக்கையும் சிந்தித்துக் காண்பது முறையாகும். குழல், முழவு, யாழ் ஆகியவற்றை நடைமுறை வாழ்வில் கண்டு அவற்றை இயற்கையில் காணப்படும் மூங்கில் துளை, அருவி, வண்டு ஆகியவற்றுடன் இசையமைப்பாகப் பொருத்தி மனிதனின் இசைக்கண்டுபிடிப்புகளைப் பற்றி நன்கு சிந்திக்கத் தூண்டுகிறார். (பெருமாள், ஏ.என், 1984, பக்.49)

"பாணர் சீறியாழ், பேரியாழ் என்ற இருவகை யாழையும் பயன்படுத்தியுள்ளனர்." "பேரியாழ்ப் புலமையுடைய ஒரு பாணனின் யாழ் எனப் புலவர் ஒருவரால் விரிவாக விளக்கப்படுகிறது." (பெருமாள், ஏ.என், 1984, பக்.102).

யாழ்ப்பாணர் என்பவர் யாழ் இசைப்பவர்கள். "குழலிலும் யாழிலும் முதன்மைப் பெரும் பண்ணையும், அதன் 21 கிளைப்பண்ணையும் (வழித்திறங்களையும்) வாசித்து இசைத்திறமை காட்டுபவன் பெரும்பாணன். இவ்வாறு ஏழு பெரும்பண்களையும் அவற்றின் திறப்பண்களையும் (கிளைப்பண்களையும்) பண்களையும் வாசித்துத் திறம் காட்டுபவனே பெரும்பாணன் என்று

இளங்கோவடிகள் கூறியுள்ளார். பெரும்பாணர்கள் தம்மிடையே உள்ள தனிப் பெரும் திறமைகளை ஒருவர்க்கொருவர் கற்பிப்பதற்கும் கற்றுக் கொள்வதற்கும் ஏதுவாகக் கூடிவாழ்ந்தார்கள்." (சுந்தரம், வீ.பா.கா., 2006, பக்.280).

"பண்டைத் தமிழ்மக்கள் பண்களைப் பற்றி எந்த அளவுக்கு அறிந்துள்ளனர் என்பதற்குச் சங்க இலக்கியம் சில குறிப்புகளைத் தந்துள்ளது. அவற்றிலிருந்து தமிழரின் இசைநுட்ப உணர்வு நன்கு விளங்கும். பண்டைத் தமிழர் மிடற்றாலும், பண்ணிசைக்கருவிகளான யாழ், குழல் முதலியவற்றாலும் பண்களை இசைத்துள்ளனர்." (பெருமாள், ஏ.என், 1984, பக்.66). இந்த வகையில் நரம்புக்கருவியான யாழ் பண்ணிசைக் கருவியாக விளங்கியுள்ளமை சங்ககாலத்தில் எழுந்த இலக்கிய நூல்களான எட்டுத்தொகை மற்றும் பத்துப்பாட்டு என்பவற்றில் காணும் குறிப்புக்களைக் கொண்டு அதன் முக்கியத்துவத்தையும் அறியமுடிகிறது.

எட்டுத்தொகை நூல்களில் நரம்புக்கருவிகளின் குறிப்பு

நற்றிணை

"யாழோர்ந் தன்ன இன்குரல் இனவண்டு
அருவி முழவின் பாட்டொடு ஓராங்கு
மெல்மெல இசைக்கும் சாரல் (நற்:176: 8-10)

"மலைச்சாரலில் வண்டுகளின் ஒலி யாழிசையாகவும் அருவியின் ஒலி முழவிசையாகவும் இணைந்து மகிழ்விக்கின்றன. பண்ணுக்குத் தாளம் இசைவது போல் யாழுக்கு முழவு இசையும் வண்டொலி பண்ணாகவும் அருவிக்குரல் தாளமாகவும் அமைந்து மலைச்சாரலை இயற்கையமைந்த இசையரங்கமாக்கிக் கலையெழச் செய்வதைக் காணலாம். (பெருமாள், ஏ.என், 1984, பக்.50).

"……………….சீறியாழ்
நரம்பிசைத் தன்ன இன்குரல் குருகு (நற்:189:3-4)

யாழிசையிலும் வேறுபாடு காட்டச் சீறியாழ் நரம்பிசை போன்ற இனிய குரலையுடைய குருகு என்று கூறுகிறார். (பெருமாள், ஏ.என், 1984, பக்.50).

படுமலைப்பண்

படுமலைப்பண் உயர்குரலில் பாடும் பண்ணாக இருக்க வேண்டும். மேகத்தின் இடிமுழக்கத்துடன் ஒப்புமைப்படுத்தப்படுகிறது. நல்வளம் கொடுக்கும் மழை மேகத்தில் குரல் போன்று யாழில் இசைக்கும் படுமலைப்பண் என்று பெருங்கௌசிகனாரின் நற்றிணைப்பாடல் கூறுகிறது.

"ஏயினை உரையியரோ பெருங்கலி எழிலி
படுமலை நின்ற நல்யாழ் வடிநரம்பு
எழீஇ அன்ன உறையினை முடிவின்

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

மண்ணார் கண்ணின் இம்மென இமிரும்" (நற்:139:3-6) (பெருமாள், ஏ.என், 1984, பக்.73).

"நற்றிணைப் பாடல்களில் சில பொன்போல் ஒளி சிந்தும் நரம்புகளையுடைய சீறியாழின் இனிமையான இசையைச் சிறப்பாக மீட்டிப்பாடும் பாணர்களைப் பற்றிய குறிப்புகளை அங்கும் இங்குமாகக் கூறுகிறது." "பாணர் கையிலுள்ள யாழிசையானது வண்டுகள் ஒலிப்பது போல் இசையெழுப்புவதை,

"பாணன் கையது பண்புடைச் சீறியாழின்
யாணர் வண்டின் இம்மென இமிரும்" (நற்:30:2-3)

என்று கூறப்பட்டுள்ளது. இயற்கை ஒலியுடன் இசையொலியை ஒப்பிட்டுக் காட்டுவதில் தழிழ் மக்களின் ஒலி ஓரும் ஆற்றல் நன்கு விளங்கும்." (பெருமாள், ஏ.என், 1984, பக்.93).

ஐங்குநுறூறு

"ஐங்குறுநூற்றிலுள்ள பத்துப்பாடல்கள் ஊடல் தவிர்க்கத் தூது வரும் பாணனை "கைவல் சீறியாழ்ப் பாண" (472:1), என்று கூறுவதில் அவனுடைய யாழிசைத் திறன் புலப்படுவதைக் காணலாம்."

பதிற்றுப்பத்து

பாணர்கள் நரம்புக்கருவியான சீறியாழ், பேரியாழ் ஆகிய இரண்டையும் இசைத்துள்ளனர். "விரல்கவர் பேரியாழ்" இசைக்கும் பாணரைப் பதிற்றுப்பத்து குறிப்பிடுகிறது. (57:8). நரம்புக்கருவியான யாழில் சீறியாழ், பேரியாழ் எனப் பலவகை யாழ்கள் இருந்தமை தெளிவாகிறது.

பதிற்றுப்பத்து பாலைப்பண்ணை நான்கு பாடல்களில் குறிப்பிட்டுள்ளது.

"தீந்தொடை நரம்பின் பாலை வல்லோன்
பையுள் உறுப்பில் பண்ணுப் பெயர்த்தாங்குச்
சேறுசெயல் மாரியின் அளிக்கும்" (பதிற்:65:14-16)

இதற்குப் பொருளாகப் பாலையாழ் வல்லான் அழுகைச்சுவைக்கு உரிய பாலைப்பண்கள் எல்லாவற்றையும் மாறி மாறி இசைத்தல் போன்று என்று கூறப்பட்டுள்ளது. இதில் பாலை என்பது யாழைக் குறிப்பிடுவதாகக் கருதப்படுகிறது. பாலை என்று கூறப்படும் யாழில் இசைக்கும் பண்களைப் பாலைப் பண்கள் என்று கூறியுள்ளனரா என்ற சிந்தனை எழவும் இடமுண்டு. (பெருமாள், ஏ.என், 1984, பக்.75).

"வாங்கிடை மருப்பில் தீந்தொடை பழுனிய
இடனுடைப் பேரியாழ் பாலைபண்ணிப்
படர்ந்தனை செல்லு முதுவா யிரவல (பதிற்:66:1-3)

என்ற ஆற்றுப்படைப் பாடலில் ஓர் இரவலனை அழுகைப்பண் பாடிப் புரவலனிடம் செல் என்று கூறியிருக்கமாட்டார்கள். இனிய இசையுடைய பேரியாழ் கொண்டு ஓர் இன்பப் பண்ணைத் தான்

இசைக்கக் கூறியிருப்பார்கள். பாலைப்பண் இனிமையுடன் இன்பஇசை கொண்ட பண்ணாக இருக்கவேண்டும் என்று கருதுவதே பொருத்தமாகப்படுகிறது. (பெருமாள், ஏ.என், 1984, பக்.76).

தழிஞ்சிப்பாடல்

விறலியரால் பாடப்படுகிறது. இளந்துணைப் புதல்வர் நல்வளம் பயந்த நிலையை வியந்து பாடும் பாடல்

செல்ல மோதில் சில்வளை விறலி
பாணர் கையது பணி தொடை நரம்பின்
விரல்கவர் பேரியாழ் பாலை பண்ணிக்
குரல்புணர் இன்னிசைத் தழிஞ்சி பாடி
இளந்துணைப் புதல்வர் நல்வளம் பயந்த" (பதிற்: 57: 6-10)

என்று வரும் பதிற்றுப்பத்து பாடற்பகுதி தழிஞ்சிப்பாடலை விளக்கும். பாணர்கள் பேரியாழ் கொண்டு பாலைப் பண்ணை இசைக்கின்றனர். விறலியர் அவ்விசைக்குத தக்கவாறு தழிஞ்சிப்பாடலை பாடுகின்றனர். இனிய குரலும் இனிய இசையும் கூடிக் கலந்து தழிஞ்சிப் பாடல் சுவை மிகுந்து காணப்படுகிறது. பாணர் யாழை இசைக்க விறலியர் குரலிணைத்துப் பாடுகிறார்கள். இதற்கு உரிய பண் பாலையாக உள்ளது. பாடு பொருளால் உழிஞை பாடலும் பெயர் பெற்றுள்ளன என்று தோன்றுகிறது. (பெருமாள், ஏ.என், 1984, பக்.60).

"பாணர் கையது பணிதொடை நரம்பின்
விரல்கவர் பேரியாழ் பாலை பண்ணிக்
குரல்புணர் இன்னிசைத் தழிஞ்சி பாடி" (பதிற் : 57: 7-9)

என்று வரும் பதிற்றுப்பத்துப் பாடல் அடிகள் யாழைக் கூறிப் பாலைப்பண்ணைப் பிரித்துக் காட்டுகின்றன. (பெருமாள், ஏ.என், 1984, பக்.77).

உழிஞை பாடல்

வெற்றி பெற்ற மன்னர் மனம் மகிழ பெண்கள் பாடுவதாகும். பாண்சாதிமகளிர் யாழிசை கூட்டிப் உழிஞைத்திணையில் புகழ்ந்து பாலைப்பண் இசைத்துப் பாடுதல். இதனை பின்வரும் பாடல் குறிப்பிடுகின்றது.

'வண்டுபடு கூந்தன் முடிபுனை மகளிர்
தொடைபடு பேரியாழ் பாலை பண்ணிப்
பணியா மரபி னுழிஞை பாட
இனிதுபுறந் தந்தவர்க் கின்மகிழ் சுரத்தலின்" (பதிற்:46:4-7)

பரிபாடல்

"ஒருதிறம் பாணர் யாழின் தீங்குரல் எழ

ஒருதிறம் யாணர் வண்டின் இமிரிசை எழ
ஒருதிறம் கண்ணார் குழலின் கரைபு எழ
ஒருதிறம் பண்ணார் தும்பி பரந்திசை எழ
ஒருதிறம் மண்ணார் முழவின் இசைஎழ
ஒருதிறம் அண்ணல் நெடுநீர் அருவிநீர் ததும்ப
ஒருதிறம் பாடல்நல் விறலியர் ஒல்குபு நுடங்க
ஒருதிறம் வாடை உளவயின பூங்கொடி நுடங்க
ஒருதிறம் பாடினி முரலும் பாலையங் குரலின்
நீடுகிளர் கிழமை நிறைகுறை தோன்ற
ஒருதிறம் ஆடுசீர் மஞ்ஞை அரிக்குரல் தோன்ற
மாறுமா றுற்றன போல் மாறெதிர் கோடல்
மாறட்டான் குன்றம் உடைத்து" (பரி:17: 9-21)

இப்பாடலில் பாணரின் யாழ் வண்டின் இமிரிசையுடன் பொருந்துவதைக் காட்டிய பின்னர் வரிசையாகக் குழலின் இன்னிசையைத் தும்பியின் பரந்திசையுடனும், முழவின் தாள இசையை அருவியின் இன்னொலியுடனும் இணைத்துக் காட்டுவது இசைக்கலைக்கும் இயற்கைக்கும் இடையே உள்ள ஒத்ததன்மையைப் புலப்படுத்துவதாகும். (பெருமாள், ஏ.என், 1984, பக்.39).

நைவளம்

"நைவளம் பூத்த நரம்பியைச் சீர்ப்பொய்வளம்
பூத்தன பாணாநின் பாட்டு" (பரி: 18: 20-21)

பாணன் யாழிசையுடன் நைவளம் பாடியதை இப்பரிபாடல் அடிகள் கூறும். மகிழ்வுடன் பாடும் பண்ணாக இருக்கலாம். (பெருமாள், ஏ.என், 1984, பக்.72)

அகநானூறு

"அரசர்கள் யாழிசை கேட்டு மகிழ்ந்து பாணர்களுக்குப் பல பரிசில்களைக் கொடுத்துப் பாராட்டியுள்ளனர். இத்தகைய ஆதரவால் இசை நன்கு வளர்ந்திருக்கும் என்று நம்பலாம். இதனை அகநானூற்றுப் பாடலொன்று விளக்கியுள்ளது.

"அருந்துறை முற்றிய கருங்கோட்டுச் சீறியாழ்ப்
பாணர் ஆர்ப்ப பலகலம் உதவி
நாளவை யிருந்த நனைமகிழ் நிதியன்" (அக: 331:10-12)

நிதியன் என்ற குறுநில மன்னன் சீறியாழ்க் கலையில் சிறந்த பாணர்களுக்குப் பல பரிசுகளை நாளவையில் உவந்தளித்துள்ளான்." (பெருமாள், ஏ.என், 1984, பக்.93).

"வண்டொலியை யாழிசையாகக் கேட்பது போல் குருகொலியையும் ஒரு புலவர் யாழ்

நரம்பிசையாகக் கேட்கிறார். இதனை இன்னொரு முறையில்

"வரையிழி அருவிப் பாட்டொடு பிரசம்
முழவுசேர் நரம்பின் இம்மென இமிரும்" (அகம்:318:5-6) (பெருமாள், ஏ.என், 1984, பக்.50).

"வண்டை யாழிசைப்பறவை" (அக: 332:8)

என்று கூறுவது எந்த அளவுக்கு யாழிசையினை வண்டின் ஒலியுடன் தொடர்புபடுத்திப் பழக்கப்பட்டுள்ளனர் என்பதற்குச் சான்றாகும். (பெருமாள், ஏ.என், 1984, பக்.52).

"பையுள் நல்யாழ் செவ்வழி வகுப்ப
ஆருயிர் அணங்குத் தௌ;ளிசை
மாரி மாலையும் தமியன் கேட்டே" (அக: 214:13-15)

செவ்வழிப்பண் யாழிசையுடன் பாடப்படுவதில் ஒரு பெண்ணின் அவல உணர்வைத் தான் அறியமுடிகிறது. அனைத்துக் குறிப்புகளும் செவ்வழிப்பண் அவலச்சுவைக்கு உரியது என்பதை நன்கு புலப்படுத்துகின்றன. (பெருமாள், ஏ.என், 1984, பக்.72).

புறநானூறு

பாணர்கள் பாடிப் பரிசில் பெறும் போது கையில் யாழை வைத்து இசைப்பர். அது இலக்கண முறை நிரம்பியது என்ற குறிப்பைச் சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனைப் பாடிய ஆலத்தூர் கிழார் தருகிறார். பாணர் பொதுவாகச் சீறியாழ் கொண்டு இசையெழுப்பியுள்ளனர். அதன் கோடு கருமை நிறமாக இருந்துள்ளது.

"களங்கனி யன்ன கருங்கோட்டுச் சீறியாழ்ப்
பாடின் பனுவற் பாணர் உய்த்தென" (புற: 127: 1-2)

என்று கூறுவதில் யாழின் கோடு கருமை நிறமுடனிருந்ததை நன்கு அறியலாம். அந்த யாழைப் பாணர் மீட்டிப் பாடும் போது கேட்போர் தலைகளை அசைத்துச் சுவைத்துள்ளனர். (பெருமாள், ஏ.என், 1984, பக்.90)

"வளைக்கை விறலியென் பின்ன ளாகப்
பொன்வார்ந் தன்ன புரியடங்கு நரம்பின்
வரிநவில் பனுவல் புலம்பெயர்ந் திசைப்ப
படுமலை நின்ற பயங்கெழு சீறியாழ்
ஒல்க லுள்ளமொ டொருபுடை தழீஇப்
புகழ்சால் சிறப்பினின் நல்லிசை உள்ளி
வந்தனன் எந்தை மானே"" (புற: 135: 4-10) (பெருமாள், ஏ.என், 1984, பக்.74).

இனிய இசையும் இன்பவுணர்வும் இப்பாடலின் வாயிலாகப் படுமலைப்பண் பற்றி அறியத்தரும் செய்திகள், புறநானூற்றுப் பாடலும் யாழிசையுடன் படுமலைப் பண்ணை இன்மையுடன்,

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

பாடுவதைக் குறிப்பிடுகிறது.

"சீறியாழின் குரல் வண்டொலி போன்று அமையும் என்பதை ஒரு புறநானூற்றுப்பாடல் குறிப்பிட்டுக் காட்டுகிறது.

"பொன்வார்ந் தன்ன புரியடங்கு நரம்பின்
மின்னேர் பச்சை மிஞிற்றுக்குரல் சீறியாழ்
நன்மை நிறைந்த நயவரு பாண" (புற: 302: 1-3)

என்ற அடிகள் புரியாக அமைந்த யாழ் நரம்புகள் பொன்வார்ந்தன்ன அமைப்புடன் இருந்தன என்று கூறப்பட்டுள்ளது. அவற்றின் நிறத்தையும் ஒளியையும் கொண்டு எனக் கருதலாம். யாழின் ஓர் உறுப்பான பச்சை மின்னலைப் போன்று ஒளியுடையதாக இருந்தது என நினைக்கலாம். அதன் இசை அனைவருக்கும் இன்பம் கொடுப்பதினாலும் அதனை எல்லோரும் விரும்புவதினாலும் யாழிசைக்கும் பாணனை "நன்மை நிறைந்த நயவருபாண" என்று புலவர் கூறுகிறார்." (பெருமாள், ஏ.என், 1984, பக்.91, 92). "வியக்கத்தக்க இசைநயமும் அழகான வளைவமைந்த கோடும் உடைய சீறியாழின் நரம்புகளைக் கைகளின் சிறப்பாக வாரும் பாணரைப் பற்றிய இசைக் குறிப்பை இன்னொரு புறநானூற்றுப் பாடலில் காணலாம்.

"ஐதமை பாணி வணர்கோட்டுச் சீறியாழ்க்
கைவார் நரம்பின் பாணர்க் கோக்கிய
நிரம்பா வியல்பிற் கரம்பைச் சீறூர்." (புற: 302: 5-7)

சிற்றூர்களிலும் பாணர்கள் பாடல்களை யாழிசையுடன் பாடி மக்களை மகிழ்வித்துள்ளனர். நகரம், பேரூர் மட்டுமின்றிச் சிற்றூர்களிலும் இசை மலிந்திருந்த செய்தியை இதனால் அறியலாம். இதிலிருந்து பண்டைய தமிழகத்தில் மக்கள் மத்தியில் இசைக்கு இருந்த செல்வாக்கு நன்கு விளங்கும். யாழை இசைத்துப் பாடுவது இன்பத்துக்கு அறிகுறி. இறப்புப் போன்ற துன்பக் காலத்தில் யாழைத் தொடாதிருக்கின்றனர். நல்லையூர் கிழார் மகன் பெருஞ்சாத்தன் இறந்து விடுகின்றான். அதனால் வருந்தும் புலவர்

"நல்லியாழ் மருப்பின் மெல்ல வாங்கிப்
பாணன் சூடான் பாடினி யணியாள்" (புற: 242: 2-3)

என்று பாடுவதில் துன்ப நிகழ்வுகளில் பாணர் யாழிசைக்கா செய்தி தெரிய வருகிறது." (பெருமாள், ஏ.என், 1984, பக்.92).

இங்கு விறலியர் என்ற பெண் இசைக்கலைஞர்கள் யாழிசை கூட்டிப்பாடுவதையும்; வண்ணப்பாடல்களை மணமுழாவின் தாள இசையுடனும் யாழின் பண் இசையுடனும் இணைத்துப் பாடுதலைப் புறநானூற்றுப் பாடல் குறிப்பிடுகின்றது.

"பாடுவல் விறலியோர் வண்ண நீரும்
மணமுழா வமைமின் பண் யாழ் நிறுமின்" (புற:152:13-14)

“பாணர்கள் விறலியருடன் இணைந்து பாடியும், ஆடியும் பரிசில் பல பெற்றுள்ளனர்.

“புரிமாலையா பாடினிக்குப்
பொலந்தாமரைப் பூம்பாணரொடு
கலந்தளைஇய நீளிருக்கையால்” (புற: 361:11-13) என்றும்
“வாடா மாலை பாடினி யணியப்
பாணன் சென்னிக் கேணி பூவா
எரிமருள் தாமரைப் பெருமலர் தயங்க” (புற:364:1-3)” (பெருமாள், ஏ.என், 1984, பக்.160).

என்றும் பாணன் பரிசில் பெற்றுள்ளான்.

இந்தப் பாடலில் பேரியாழில் பாலைப்பண்ணில் உழிஞைப் பாடலைப் பாடும் போது அது இன்பத்தை அனைவருக்கும் அளிப்பதாகக் கூறப்பட்டுள்ளது. (பெருமாள், ஏ.என், 1984, பக்.76).

பாணர் இசைக்கலைஞர் என்ற சிறப்பைப் பெற்றவர். அவர்களைப் பெரும்புலவர்கள் சிறப்பித்துப் பாடியுள்ளனர். யாழிசைத்துப் பாடுவதில் வல்லவர். இசைநயம் தெரிந்தவர்களைத் தலையசைத்துச் சுவைக்குமாறு சீறியாழ் மீட்டிச் சிறப்பாகப் பாடும் பாணர்களைப் புறநானூறு குறிப்பிடுகிறது. (புற:145:5-6) பாணனிடம் “கைவல் சீறியாழ்” இருப்பதாக அறிவிக்கப்படுகிறது. (புற:398:5). இதிலிருந்து பாணர் யாழிசைப்பதில் வல்லவர் என்பது புலனாகும். “தீந்தொடைச் சீறியாழ்ப்பாணன்” என்று சிறப்பித்தமையால் (புற:285:3-4) இனிமையான இசையை யாழின் துணையால் எழுப்ப வல்லவன் என்ற உயர்வு விளங்கும்.” (பெருமாள், ஏ.என், 1984, பக்.154). யாழிசைப்பது போன்று பாட்டிசைப்பதிலும் பாணர் வல்லவர்.

செவ்வழிப்பண்

“புறநானூற்றில் செவ்வழி பற்றிய செய்தி உள்ளது. முன்னிரவில் செவ்வழிப்பண் இசைக்கப்படுகிறது.

“அருளா யாகலோ கொடிதே யிருள் வரச்
சீறியாழ் செவ்வழி பண்ணி யாழநின்
காரெதிர் கானம் பாடினேம் ஆக” (புற:144:1-3)

சீறியாழின் துணையுடன் செவ்வழிப்பண்ணைப் பாடினதாக உரைக்கப்படுகிறது. இது அருள் வேண்டி இரக்கத்துடன் பாடிய பாடலாக உள்ளது.

சீறியாழ் கொண்டு கிரங்கித் துன்பச் சுமை தாங்காது செவ்வழி பாடுவதைப் புறநானூற்றுப் பாடல் ஒன்று காட்டுகிறது.

“சீறியாழ் செவ்வழி பண்ணி வந்ததைக்
கார்வாள் இன்றுறை தமியன் கேளா
நெருநல் ஒருசிறைப் புலம்பு கொண்டுறையும்
அரிமதர் மழைக்கண் அம்மா அரிவை” (புற:147:28) (பெருமாள், ஏ.என், 1984, பக்.71).

பாலைப்பண்

சங்கஇலக்கியத்தில் குறிப்பிடப்பெற்றுள்ள பண்களில் மிகச் சிறந்ததும் புகழுடையதுமாகப் பாலைப்பண்ணைக் கருதலாம். இது அக்காலத்தில் பெரும் வழக்காக இருந்திருக்க வேண்டும். இது பாலைக்குரிய பண் என்று பெயரைக் கொண்டு கருதுவது சிந்தனைக்கு உரியதாகும். இது நண்பகலுக்கு உரிய பண். இதற்குச் சுவையும் இனிமையும் மிகுதி என்று கூறப்படுகிறது. இதனைப் பேரியாழ் கொண்டு இசைப்பர் என்பதினால் இதற்குச் சிறப்பு மிகுதி என்று கருதலாம். (பெருமாள், ஏ.என், 1984, பக்.74). பணியாத தன்மையுடைய மன்னனை மகளிர் யாழிசை கூட்டிப் பாலைப்பண் இசைத்துப் போற்றுகின்றனர். அவள் எதிரிகளைப் புறங்காட்டச் செய்தவன். நாட்டுக்கு அவனால் இன்பம் கிடைத்தது. அத்தகைய மன்னனைப் புகழ்ந்து பாடுவது உழிஞை பாட்டாகக் கூறப்படுகிறது. இப்பண் பேரியாழின் துணையுடன் பாடப்பட்டுள்ளது.

பத்துப்பாட்டு நூல்களில் நரம்புக்கருவிகளின் குறிப்பு

பொருநராற்றுப்படை

"பாணர் விடியலில் தடாரியைக் கொட்டிப் பாடும் காட்சியைப் பொருநராற்றுப்படை விளக்கிக் காட்டுகிறது.

"கைகச டிருந்தவென் கண்ணகள் தடாரி
இருசீர்ப் பாணிக் கேற்ப விரிகதிர்
வெள்ளி முளைத்த நள்ளிருள் விடியல்
ஒன்றியான் பெட்ட வளவையின்" (பொரு:70-73) (பெருமாள், ஏ.என், 1984, பக்.140).

பெரும்பாணாற்றுப்படை

"பெரும்பாணாற்றுப்படை பேரியாழ்ப்பாணரைப் பற்றியும் சிறுபாணாற்றுப்படை சீறியாழ்ப்பாணரைப் பற்றியும் பாடி அவர்களுடைய அவலநிலை, இசைநிலை, பரிசில்பெறுநிலை ஆகியவற்றை விளக்குகின்றன. சங்ககாலப் பாடலிசை, கருவியிசை ஆகியவை பாணர்களால் தான் மிகுதியாக வளர்க்கப்பட்டுள்ளன." (பெருமாள், ஏ.என், 1984, பக்.158, 159).

குறிஞ்சிப்பண்

"வில்யாழ் கொண்டு குறிஞ்சிப்பண் பாடும் ஒரு குறிப்பும் கிடைக்கிறது. "வில்யாழிசைக்கும் விரலெறி குறிஞ்சி" (பெரும்பா:182). வில்யாழை விரலால் சுண்டி இசையெழுப்பிக் குறிஞ்சிப் பண்ணைப் பாடுவதாகக் கூறப்படுகிறது. (பெருமாள், ஏ.என், 1984, பக்.70).

முல்லைப்பாட்டு

"யாழிசை இனவண்டே" (முல்லை:8)

என்பது வண்டு எழுப்பும் ஒலி யாழிசைக்கு ஒப்பிடப்படுகிறது. (பெருமாள், ஏ.என், 1984, பக்.52).

மதுரைக்காஞ்சி

வேதப்பாடல்

“தாதுண் தும்பி போது முரன்றாங்
கோதல் அந்தணர் வேதம்பாட
சீரினது கொண்டு நரம்பினி தியங்கி
யாழோர் மருதம் பண்ண” (மது.காஞ்:655-658)

வேதப்பாடல் தும்பிமலரில் முரன்று குரலிடுவது போன்று அந்தணர்களால் பாடப்படுகிறது. அதன் சீரானது இனிமையுடன் அமைகிறது. அவர்களுக்குத் துணையாக யாழிசைப்போர் மருதப்பண்ணை இசைக்கின்றார்கள். (பெருமாள், ஏ.என், 1984, பக்.62, 63).

செவ்வழிப்பண்ணை யாழிசையுடன் முழவம், ஆகுளி தாள இசைக்கருவிகளுடன் பாடியதையும் காணமுடிகிறது.

“திவவு மெய்ந் நிறுத்தும் செவ்வழி பண்ணிக்
குரல் புணர் நல்யாழ் முழவோடொன்றி
நுண்ணீர் ஆகுளி இரட்டப் பலவுடன்
ஓண் சுடர் விளக்கம் முந்துற மடையொடு (மதுரைக்:604-607)

என்று வரும் மதுரைக்காஞ்சிப் பாடல் செவ்வழிப்பண் பாடும் முறையை விளக்கிக் காட்டுகிறது

நெடுநல்வாடை

ஆடல் மகளிர் பாடல்

ஆடுகின்ற பெண்கள் அமர்ந்து பாடுவதை ஆடல்மகளிர் பாடல் என்று நெடுநல்வாடை குறிப்பிடுகிறது. அவர்கள் யாழை மீட்டி அதற்குத் தக்கவாறு மிக இனிமையாகப் பாடுவர். அரசமங்கையர்க்கு ஆறுதலாகவும் தேறுதலாகவும் அவர்களுடைய பாடல் அமையும். பாண்டியன் போருக்குச் சென்று விடுகிறான். பாண்டிமாதேவி வருத்தத்துடன் காணப்படுகிறான். அவளுக்கு ஆறுதலாக ஆடல் மகளிர் பாடுகின்றனர்.

“ஆடல் மகளிர் பாடல்கொள புணர்மார்
தண்மையில் திரிந்த தண்குரல் தீந்தொடை
கொம்மை வருமுலை வெம்மையில் தடைஇ
கருங்கோட்டுச் சீறியாழ் பண்ணுமைமுறை நிறுப்ப” (நெடுநல்: 67-70) (பெருமாள், ஏ.என், 1984, பக்.62).

ஆடல்மகளிரின் குரல் தண்மையானது. பாடல் இனிமையானது. அவர்கள் சீறியாழ் எடுத்துப் பாடுகின்றனர். அது தண்மையில் நரம்பு முறுக்கிழந்து காணப்படுகிறது. அதை முறுக்கேற்ற வெம்மை ஏற்ற வேண்டும். அதற்காக யாழ் நரம்பை மார்பில் ஏற்றி வெம்மை ஏற்றிப் பாடுகின்றனர். (பெருமாள், ஏ.என், 1984, பக்.62).

பட்டினப்பாலை

"வெறி ஆடுமகளிரொடு செறியத் தாஅய்,
குழல் அகவ, யாழ் முரல" (பட்டின:155,156)

இங்கு மகளிர், குழல், யாழ் இசையொடு ஆடுவதைக் கூறுகிறது.

முடிவுரை

சங்ககாலத்தில் எழுந்த இலக்கிய நூல்களான எட்டுத் தொகை மற்றும் பத்துப்பாட்டு நூல்களில் கூறப்பட்ட செய்திகளின் படி யாழ் என்ற நரம்புக்கருவியைப் பாணர்கள் என்ற இசைக்கலைஞர்கள் இசைத்துள்ளமை புலனாகிறது. இதில் சீறியாழைச் சிறுபாணரும், பேரியாழைப் பெரும்பாணரும் இசைத்து வந்துள்ளனர். அரசர்கள் யாழிசையைப் பகிர்ந்து இசைத்து வந்துள்ளனர். சீறியாழின் ஒலி வண்டொலியுடன் ஒப்பிடப்படுகிறது. யாழ் இன்பநிகழ்வுகளில் இசைக்கப்பட்டுள்ளது. துன்பநிகழ்வுகளில் இசைக்கப்படுவதில்லை. இதன் மூலம் நரம்புக்கருவியான யாழின் சிறப்பு விளங்குகிறது. இவ்வளவு சிறப்புப் பெற்றிருந்த யாழ் தற்போது வழக்கிழந்து போயுள்ளது. அதன் வளர்ச்சியே வீணை என்ற இசைக்கருவி தோன்ற வழிவகுத்துள்ளது.

உசாத்துணை நூல்கள்

1. அங்கயற்கண்ணி, இ, மாதவி, இ.ரா., நவரத்தினம், நா.வி.மு, சீத்தாலட்சுமி, சீ, (2005), இசையும் பிறநுண்கலைகளும், இசைத்துறை, தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சாவூர்

2. அங்கயற்கண்ணி, இ, மாதவி, இரா., (2006), தமிழிசை தொன்மையும் பெருமையும் தொகுதி – I ஆகஸ்ட் – முதற்பதிப்பு, தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சாவூர்

3. அங்கயற்கண்ணி, இ, மாதவி, இரா., (2006), தமிழிசை தொன்மையும் பெருமையும் தொகுதி – II ஆகஸ்ட் – முதற்பதிப்பு, தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

4. கௌசல்யா, ராம, (2004), ஆலயவழிபாட்டில் இசைக்கருவிகள், மீனாம்பிகை பதிப்பகம், தஞ்சாவூர்.

5. கௌசல்யா, ராம, (2004), தமிழிசை ஓராய்வு, மீனாம்பிகை பதிப்பகம், தஞ்சாவூர்.

6. பார்த்தசாரதி, டி.எஸ்., (1994), இசைக்கருவிகள், நேஷனல் புக் டிரஸ்ட், இந்தியா.

7. சோமாஸ்கந்தசர்மா, அ.நா, (1998), மிருதங்கசங்கீதசாஸ்திரம், யுனி ஆர்ட்ஸ் பிறைவேட் லிமிட்டெட், கொழும்பு.

8. பக்கிரிசாமிபாரதி, கே.ஏ. (2004), திருக்கோயில் நுண்கலைகள், குசேலர் பதிப்பகம், சென்னை.

9. பெருமாள், ஏ.என்., (1984), தமிழர்இசை, உலகத்தமிழாராய்ச்சி நிறுவகம், சென்னை.